www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

UPSC CSE 2019 MAINS PAPER A SEPTEMBER 28, 2019 TAMIL COMPULSORY LANGUAGE QUESTION PAPER

# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / (COMPULSORY)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **300** |
| *Time allowed : **Three Hours*** | *Maximum Marks : **300*** |

---

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப் பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் ***தமிழில் (தமிழ் எழுத்தில்)*** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்ட படி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கேக் கோடு இடவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL (Tamil script)** unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q1.** **பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக.** *100*

(a) கல்வியின் தேவை - வளர்ச்சிப்பணிகளுக்கும் முன்னேற்றத்திற்கும்.

(b) இந்தியாவில் வனவிலங்குப் பாதுகாப்பில் எதிர் கொள்ளும் சவால்கள்.

(c) இளைஞர்களின் மனநோய்க்குத் திரைப்படங்களின் தாக்கம் காரணங்களாகுமா ?

(d) மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டை ஊக்குவித்தல்.

**Q2.** **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சுருக்கமாகவும் விடை எழுதுக.** *12×5=60*

சில ஆயிரமாண்டுகளுக்கு முன்புவரையிலும் மனிதன் இவ்வுலகில் வேட்டைத் தொழில் செய்பவனாக, அத்தொழிலில் ஈடுபட்டிருந்தான் புதிய கற்காலம் தொடங்குவது வரையிலும் அவன் நிலத்தை வளமாக்கி விவசாயம் செய்வதற்குத் தொடங்கவில்லை. நிலத்தை வளப்படுத்தி உணவு உற்பத்தியை மேற்கொண்டு அதனைப் பெருக்குவதற்கு வளமான நிலப்பரப்புக்களைத் தேடவேண்டிய கட்டாய நிலை இருந்தது. அவன், தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டு விவசாயத்தைப் பெருக்கிய போதிலும் அவனால் இன்றைய விவசாயத்தில் அதிகப்படியான இலாபம் கிடைப்பது போன்று முன்பு நிலத்திலிருந்து விவசாயத்தில் இலாபம் பெற இயலவில்லை.

www.prepp.in

எனவே தான் அவன் வேட்டைத் தொழிலிலே ஈடுபாடு உடையவனாக விளங்கினான். அவன் மீனையும், பிற விலங்குகளையும் பிடித்துப் பயன் அடைந்தாலும் அவற்றின் வளர்ச்சிக்கு ஊறு இல்லாமல் பாதுகாத்தான். நீர்ப்பகுதிகளில் வேட்டையாடிக் கிடைத்த மீன்களில் இருந்து தேவையான சத்துப் பொருளான புரோட்டின் மிகுதியாகக் கிடைத்தது. சுருங்கக்கூறின் நிலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற சத்துப் பொருளுக்குப் பதிலாக இதனைப் பெற்றுக் கொண்டான். ஆனால் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக, மனிதனுக்குத் தேவைப்பட்ட புரோட்டின் சத்து கடலில் இருந்தும் ஏராளமாகக் கிடைத்தது. ஏராளமாகக் கிடைத்தது எனக் கூறினாலும் அது பற்றாக்குறையாகவே இருந்தது. ஆகவே, மனிதன் கடல்வளத்திலிருந்து தேவையானவற்றைப் பெற்று, தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிய முற்பட்டான். அதனடிப்படையில் மீன் வளத்தைக் கடலிலிருந்து பெற்றுப் பயன்படுத்திக் கொண்டான். இதற்காகக் கடல் மீன் பண்ணையைத் தொடங்குவதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மீன் வளர்ப்பிடங்கள் சிறிய அளவில் முதன் முதலில் தொடங்கப்பட்டன. மீன்குளங்கள், ஏரிகள், செயற்கையாக உருவாக்கப்பட்ட நீர்நிலைகள், ஏரிகள், அணைக்கட்டுகள் போன்ற இடங்களில் தொடங்கப் பெற்றவை வெற்றிகரமாகச்

www.prepp.in

செயற்படுத்தப்பட்டன. புரோட்டின் வினியோகத்தில் இலாபம் பெறும் நோக்குடன் விவசாய அதிகாரிகளின் மேற்பார்வையில் அவர்களின் ஒத்துழைப்புடன் நல்லநீர் மீன்குளம் கிராமப்புறங்களிலும் அதைச் சார்ந்தமைந்துள்ள இடங்களிலும் விரிவாக்கம் செய்யப்பட்டன. இதற்கு விவசாய அதிகாரிகளின் மேற்பார்வையும் உதவியும் ஆலோசனையும் கிடைக்கப் பெற்றன. மீன் குளங்களின் உருவாக்கத்தின் போது சிறிய மீன்களைக் குளத்தில் விட்டு நல்ல ஆரோக்கியமான சூழலில் அவற்றை வளரச் செய்து, தேவையான மீனை உணவாகப் பெற இயலும் குளத்தில் மீன்களுக்குத் தேவையான உணவுடன் சிறுபூச்சிகள், சிறுதாவரங்கள், பிராணிகள் இவை காணப்படுவதால் சிறிய மீன்கள் அவற்றை உண்ணும் போது விரைவில் அவை பெரிய மீன்களாக வளர்ச்சி அடையும். நீரில் சூட்சுமசீவிகள், அவற்றின் வளர்ச்சி காரணமாகச் சில தாதுக்களை உருவாக்குகின்றன. இது மீனுக்கும் நீருக்கும் வளமாக அமைகின்றது.

கடலில் மீன் வளர்ப்பு உருவாக்குவதற்கு பலசிக்கல்கள் உள்ளன. இலாபகரமான இத்தொழிலில் ஏற்பட்ட பலசிக்கல்கள் அகற்றப்பட்டன. சான்றாக, கடலில் குறிப்பிட்ட வளமான பகுதிகளில் மீன் வளர்ப்பைக் கடலில் ஏற்படுகின்ற நீரோட்டம் வெகுதூரத்திற்கு இழுத்துச் சென்றுவிடும். மீன்வளர்ப்பவன் எவ்வளவு தான் கட்டுப்படுத்தினாலும் இயலாமல்

www.prepp.in

போய்விடுகின்றது. எனவே கடல் மீன் வளர்ப்பு, இயல்பு நிலையும் இலாபமும் இல்லாதுவிடுகிறது. மீன் வளர்ப்பின் பொருட்டு மிகுதியான அளவு பொருளைச் செலவு செய்தாலும் அவன் நினைத்த மாதிரி உணவுப் பொருளை எந்த வழியிலும் வழங்க இயலாமல் போய்விடுகின்றது. கடலில் உள்ள பிற உயிரினங்கள் அவற்றை உண்ண ஏதுவாகின்றது. இது ஒருவகையான களை எடுப்புப் பண்பினதாகும்.

இத்தகைய சிக்கல்களை வெகு எளிதாக அகற்ற இயலாது; ஏனெனில் கடலின் மிக அகன்ற பரப்பு உலக நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பங்காக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமன்றி, குளங்கள் ஏரிகள் என்பன போலன்றி கடல் நீர்ப்பரப்பின் பகுதிகளில் எப்பொழுதும் ஒரு வகையான சுழற்சி காணப்படுவதும் உண்டு. இதுபோன்ற சிக்கல்கள் மெதுவாக அகற்றப்படும். வருங்காலங்களில் மனிதன் மீன் பண்ணைகளைச் சிறிய அளவில் மேலோட்டமான கடல்நீர் கரைப்பகுதிகளில் தொடங்க வேண்டும்.

இதனால் குறிப்பிட்ட வகையான தேவையான மீன்களை வளர்க்கவும் பிடிக்கவும் தேவையற்ற விரும்பத்தகாத சிறுபிராணிகளை நீக்கவும் களைகளை அகற்றவும் தேவையான இடங்களில் கடல்பகுதியை வளப்படுத்தவும் தேவையான மீன் வளத்தைப் பெருக்கவும் முனையலாம்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(a) வேட்டை, விவசாயம் இவை தவிர கடல் மீன்வளர்ப்பு எதிர்காலத்தில் தேவையாக உள்ளது. ஏன் ? 12

(b) மீன் வளர்ப்பில் வளப்படுத்துவோரின் பங்களிப்பு என்ன ? 12

(c) கடற்பரப்பில் எவ்வகையான இடத்தில் மீன் வளர்ப்பின் தொடக்கம் ? 12

(d) 'களை எடுப்பு' என்பதன் புரிதல் தன்மை யாது ? 12

(e) எதிர்காலத்தில் கடல்மீன் வளர்ப்பில் பிரச்சினைகளின் தீர்வு எங்ஙனம் ? 12

**Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.** **60**

இந்தியாவில் முக்கியமாகக் கிராமப்புறத்தில் வாழக்கூடிய மக்கட்தொகையும் அவர்களின் சமுகப் பொருளாதார நிலை, வாழ்க்கைத்தர நிலை என அனைத்து நிலைகளிலான முன்னேற்றத்திற்கும் கிராமப்புறக் கட்டமைப்பு யாவும் அவர்களின் நீண்டகாலத் தேவை என்பதுடன் அவர்களின் வளர்ச்சிக்கு நியாயமானதும் ஆகும். இதில் குறிப்பிடத்தக்கதான ஒன்று குடிநீர் கிராமப்புற மக்களுக்குத் தேவையான அளவில் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் என்பது முக்கியமான பணியாகும். மக்களுக்குத் தண்ணீரின் தேவை என்பது இன்றியமையாதது; சந்தேகத்திற்கு இடமில்லாதது. பொதுமக்களின் இத்தகு தேவைக்கு என்று பணமுதலீடு தேவைப்பட்டால் அப்பண முதலீட்டை, அதிகப்படுத்துவதற்கு அதற்கான உள்ளமைப்பைக் கட்டமைத்திட வேண்டுவது தேவை. குடிநீர்ப் பற்றாக்குறை மிக்குள்ள நாடுகள் சுத்தமான, பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்க இயலாது; மட்டுமன்றி சமுதாயம்

www.prepp.in

ஆரோக்கியமான, சுத்தமான வாழ்க்கை மேம்பாடும் பொருளாதார மேம்பாடும் எய்த இயலாது. இந்தியாவில் மிக அதிகமான கிராமப்புறமக்களுக்குக் குடிநீர் வழங்குதல் என்பது கடினமானதாகும். குடிநீர் வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள குடிதண்ணீர் இடங்கள், இதன் பற்றாக்குறைகள் போல்வனவும் இதற்குக் காரணங்களாகும். மக்களின் கல்வித்தரத்திலுள்ள குறைநிலை, பொருளாதாரத் தாழ்வுநிலை போன்ற குறைபாடுகளும் மற்றுமுள்ள காரணங்களாகும். கல்வி, பொருளாதாரம் இவற்றில் விழிப்புணர்ச்சி ஏற்படுமாயின் இத்தகுக் குறைகளை நிவர்த்தி செய்ய இயலும், நீரைப் பயன்படுத்துவதிலும் மேம்பட்ட நிலையை அடையலாம்.

இந்திய அரசியல் சட்டம் 47-இன்படி மக்களின் பொது நலனைக் கருத்திற்கொண்டு, சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும். சுத்தமான குடிநீர் வழங்குதல் என்பது மக்களின் நோயைக் குறைத்திடவும் உயிரிழைப்பைத் தவிர்க்கவும் என மொத்தத்தில் உடல் நலப்பாதுகாப்பிற்கு உதவுவதுமாகும்.

இது ஆழமாக வலியுறுத்த, மட்டுமன்றி, தேவையான முன்னேற்றம் பெற, தண்ணீர் உறுதியாகக் கிடைக்கப்பெற வேண்டிய சரியான நிலைப்பாடும் சுகாதாரமும் வன்மை பெறுகின்றது. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட சுத்தமான நீர் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தும் பாங்கில் இந்த ஆண்டு மார்ச்சு மாதம் 22-ஆம் நாள் 'உலக நீர் நாள்' ஆகக் கொண்டாடப்பட்டது.

அரசு, கிராமப்புற மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு உறுதி மேற்கொண்டுள்ளது. அதன்பொருட்டு பல்வேறு முயற்சிகளை பலநிலைகளில் மேற்கொண்டதுடன்,

www.prepp.in

தடைகளையும் நீக்கம் செய்தது. கிராமப் புறங்களில் நீர் வழங்கிட பல கட்டுமானப் பணிகளை மேற்கொண்டதோடு நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தேவையான பராமரிப்புப் பணிகளையும் பிற செயற்பாடுகளையும் நிறைவேற்றியுள்ளது. கிராமப்புறங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீரை வழங்கிடும் நோக்கத்தில் 'மழை நீர்ச் சேகரிப்பு' முக்கிய பணியாகக் கொள்ளப்பட்டது. அரசு, மழை நீர்ச் சேகரிப்பை முக்கிய திட்டமாகக் கொண்டு அதற்கான செயற்கையான கட்டமைப்புப் பணிகள் சிலவற்றை மேற்கொண்டது. இந்தியாவில் வழங்கி வருகின்ற பலகதைகளில் நம் முன்னோர்களின் மரபுப் பண்பாட்டடிப்படையிலான அறிவுத்திறனும் புத்திக்கூர்மையும் சுட்டப்பெற்றுள்ளன. 2001–ஆம் ஆண்டு தமிழக அரசு வீடுகளில் மழைக்குழிகள் கட்டமைப்பு அமைத்திடக் கட்டாயப்படுத்தியது. இத்தகைய சோதனை முறை பங்களூரிலும் முயற்சிக்கப்பட்டது. பூனாவிலும் கூட்டுறவு வீட்டுக் குடியிருப்புகளிலும் இம்முறை மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்று பல மாநிலங்களிலும் இம்முயற்சி தொடங்கப்பட்டது.

இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்துதல் என்பது கவலைக்கிடமானதாகும். மாநில அரசுகள் இதனைத் தடுப்பதற்காகக் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் கொண்டு வர வேண்டியது தேவையாகும். தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் ஆழமாகக் கிணறு தோண்டுவது தவிர்க்கப்பட வேண்டும். குடி தண்ணீர் வழங்குவதில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் கூடுதலான பங்களிப்பினை வகிக்க வேண்டும். இப்பணி வரவேற்கத்தக்கதும் தேவையானதுமாகும். ஆயின், தற்போது

Prepp
Your Personal Exams Guide

பஞ்சாயத்துராஜ் அமைப்புகளின் பங்களிப்பு குறைவாகவே உள்ளதாகத் தெரிகின்றது. கிராமங்கள், என். ஜி. ஓக்கள், அரசு இவை அனைத்தும் பங்காளிகளாக இணைந்து செயல்பட்டு இப்பணியை வெற்றியடையச் செய்யலாம். கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கிடைத்திவும் தேவையான முயற்சிகள் பலவற்றையும் நேர்மையுடன் செய்து குடிநீரைப் பாதுகாக்கவும் பயன்படுத்தவும் மக்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்தலாம்.

உள்ளார்ந்த சமூக உரிமையானது, அச்சமூகத்தின் ஈடுபாடு மற்றும் பராமரிப்பின் அடிப்படையில் பொருளாதார நம்பகத்தன்மையும், ஆயுட்காலமும் பெற்று மேன்மையடைகிறது. எனவே, நீர் உறைவிடங்களைச் சுத்தமாகப் பாதுகாக்கவும் நீரைச் சேகரித்துப் பாதுகாத்து வைத்திடவும். அவ்வாறு சேகரிக்கும் போது மாசுபடுதலைத் தவிர்க்கவும் சரியாகப் பயன்படுத்தவும் மக்கள் சமூகத்திற்கு மிகுதியான பங்கு உள்ளது.

மொத்தமாக இத்தகு செயல்பாடுகளையும் திட்டங்களையும் முழுமைப்படுத்துவதற்குப் பஞ்சாயத்து ராஜ் இயக்கங்களின் வழியிலான மக்கள் சமுகத்தின் தீவிரமான ஈடுபாடு தேவை. அத்துடன் கிராமப்புற மக்களின் தன்னார்வச் சேவை, கூட்டான உழைப்பு, முயற்சி, கூட்டுறவுகளின் ஆர்வம் போல்வன வேண்டுவதாகும் இதனடிப்படையில் மக்களின் நீண்டகால பிரச்சினையான ‘ஹர் கர் ஜல்’ என்பது 2030-ஆம் ஆண்டில் மெய்ப்பித்துக்காட்ட இயலுவதாகும்.

*(442 சொற்கள்)*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.** *20*

ஒரு மனிதன் தன்னைத் தானே உற்றுநோக்கி, தன்னைத் தானே தவறாக மதிப்பீடு செய்து கொண்டான். அவன்தன் உள்மனத்தைப் பார்த்தான். பல மனிதர்களும் நல்ல செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. அவர்களின் செயல்பாடுகள் நல்லவிதமான முடிவுகளைத் தருவதாகும். எது எப்படி இருந்தாலும் அவர்களின் செயல்களின் முடிவு நல்லதாக அமையும். ஒரு தனிமனிதனுக்குப் புலனால் நேரடியாக அறியக் கூடியவற்றையும் அவனுடைய எண்ணங்களையும் முடிவு செய்ய சிலவேளை அவை முரண் நிலையை எய்தலாம்.

பலரும் ஒரு வேலையைச் செய்யும் போது நல்ல எண்ணத்தில் செய்யலாம். மற்றும் சிலர் வேலைகளை அவர்களுக்கு வசதியான முறையில் வசதியான நேரத்தைக் கண்டு, வீட்டுக்குச் சென்று மாலைவேளையில் திருப்தி நிலை அடைவர். அவர்கள் அவர்களுடைய செயல்களை மதிப்பீடு செய்வதில்லை. ஆனால் அவர்கள் அவர்களுடைய எண்ணங்களை மதிப்பீடு செய்வர். ஒரு மனிதன் அவன் மேற்கொண்ட பணியைக் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும் என நினைக்கிறான். அதில் தாமதம் ஏற்பட்டால், அது அவனுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்று ஊகிக்கவேண்டும். அவன் தாமதப்படுத்துவதற்கு எண்ணம் உடையவன் அல்லன் எனினும் அவனுடைய எண்ணம் அல்லது செயல் அவ்வாறு தாமதப்படுத்தச் செய்கிறது. அது அவனுடைய உள்நோக்கமாகுமா ?

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

நாம் எப்போதும் சாதாரணமாக வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது என்பதற்குப் பதிலாக அதோடு கவனிப்பையும் மேற்கொள்ள வேண்டும். மனிதர்கள் எப்போதும் தோல்வியைப் பற்றி ஆய்வு செய்வது உண்டு; அதன் விளைவுகளையும் சிந்திப்பதுண்டு; நாம் அடைகின்ற பல துன்பங்களும், பல பிரச்சினைகளும் இறைவன் நம் வளர்ச்சிக்குத் தருவதாகக் கொள்ள வேண்டும். எனவே ஒருவனுடைய நம்பிக்கை, கனவு, கொள்கை இவற்றை எல்லாம் அவனது வீழ்ச்சியிலிருந்து அறிந்து, வளமான எதிர்காலம் பெற, அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இதுவே தருணம் ஆகும்.

**Q5.** **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.** *20*

Freedom has assuredly given us a new status and new opportunities. But it also implies that we should discard selfishness, laziness and all narrowness of outlook. Our freedom suggests toil and the creation of new values for old ones. We should so discipline ourselves as to be able to discharge our responsibilities satisfactorily. If there is any one thing that needs to be stressed, it is that we should put in action our full capacity, each one of us in productive effort — each one of us in his own sphere, however humble. Work, unceasing work, should now be our watchword. Work is wealth, and service is happiness. The greatest crime today is idleness. If we root out idleness, all our difficulties, including even conflicts, will gradually disappear. Whether as constable or high official of the state, whether as businessmen or industrialist, artisan or farmer, each one is discharging the obligation to the state, and making a contribution to the welfare of the country. Honest work is the anchor to which we should cling if we want to be saved from danger or difficulty. It is the fundamental law of progress.

www.prepp.in

**Q6.** **(a)** **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) உரை *2*

(ii) கரி *2*

(iii) நகை *2*

(iv) மலர் *2*

(v) மறை *2*

**(b)** **பின்வரும் இணைகளின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) களை - கழை *2*

(ii) கொல்லை - கொள்ளை *2*

(iii) செறு - செரு *2*

(iv) வன்மை - வண்மை *2*

(v) துரவு - துறவு *2*

**(c)** **பிரித்தெழுதுக :** *1×5=5*

(i) அரவரசு *1*

(ii) உழுதுழுது *1*

(iii) வெள்ளத்தனைய *1*

(iv) கேட்பொலி *1*

(v) கற்றூண் *1*

www.prepp.in

| | | | |
|---|---|---|---|
| **(d)** | **எதிர்ச்சொற்கள் தருக :** | | *1×5=5* |
| | (i) | அன்பு | *1* |
| | (ii) | இம்மை | *1* |
| | (iii) | தேய்வர் | *1* |
| | (iv) | சிறுமை | *1* |
| | (v) | வெறுப்பு | *1* |
| **(e)** | **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** | | *1×5=5* |
| | (i) | ஊக்கம் உடையவர் உயர்வு எய்துவர். | *1* |
| | (ii) | கல்விச் செல்வத்தை அனைவரும் போற்றுவர். | *1* |
| | (iii) | அவன் என்னை எதிர்த்துப் பேசினான். | *1* |
| | (iv) | ஆசிரியர்களுக்கு என்றும் மரியாதை உண்டு. | *1* |
| | (v) | தேம்பாவணி சிலப்பதிகாரத்திற்குப் பிந்தியது. | *1* |
| **(f)** | **பிழை நிக்கி எழுதுக :** | | *1×5=5* |
| | (i) | ஒம்பது வேர் வந்தனர் | *1* |
| | (ii) | கறிக் கொளம்பு உண்டு | *1* |
| | (iii) | தலைக்கு அஞ்சு பழம் கொடு | *1* |
| | (iv) | சிவப்பு கொரங்கைப் பார்த்தேன் | *1* |
| | (v) | ஊருணியில் தவக்களைக் கூட்டம் | *1* |

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide